# மூதூரில் படையினரால் தமிழர் விரட்டியடிப்பு;


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் [illegible] திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 22 இதழ்: 208
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 7-9-1991


## வீடுகளுக்கும் தீவைப்பு!

[திருமலை]
திருமலை மாவட்டத்திலுள்ள மூதூர்பகுதியில்இருந்து பெரும் பாலான தமிழ் மக்கள் அகதிகளாக வெளியேறி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மூதூர் பகுதியில் கடந்த சில
[4ம் பக்கம் பார்க்க]

## புலிகளின் கண்ணியில் ராணுவத்தினர் கால் இழப்பு

(திருமலை)
திருமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கண்ணி வெடியில் சிக்கிய இராணுவத்தினர் பலர் கால்களை இழந்துள்ளனர்.
மேற்படி மாவட்டத்தி
(3-ம் பக்கம் பார்க்க)

## சட்டசபையிலிருந்துதி.மு.க வெளிநடப்பு

[சென்னை]
தமிழ்நாடு சட்டசபையில் இருந்து நேற்று தி. மு. க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்.
ராஜீவ் காந்தியின் கொலை பின் தி. மு. க. பொறுப்
(3-ம் பக்கம் பார்க்க)

# கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் லலித்தலைமையில்8எம்பிக்கள் தாக்கல்செய்தமனு தள்ளுபடி!

(கொழும்பு)
முன்னாள் கல்வி உயர்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தலைமையில் எட்டு எம். பி.க்கள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல்செய்த வழக்கு நேற்று மாவட்ட நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஐ. தே. கட்சி தங்களைவெளியேற்றக்கூடாது. வெளியேற்ற தடையுத்தரவு ஒன்றை முடியாது எனக்கோரும் நீதிபதியிடம் கேட்டு வழக்கு
[3-ம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவில் 13 படையினர்பலி

### ராணுவ அதிகாரி தகவல்

(கொழும்பு)
முல்லைத்தீவுப் பகுதியில் கடந்த திங்கள்முதல் அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் மோதல்களில் 13 படையினர் கொல்லப்பட்
[4-ம் பக்கம் பார்க்க]

## பொதுமக்கள் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிட அஞ்சுகின்றனர்

- லலித்

[கொழும்பு]
"ஒருவர் தமது சொந்தக் கட்சிக்கு விரோதமானது கருத்தை வெளியிட்டால் அது என்று எப்படிக் கூறமுடியும்?"
இவ்வாறு திரு. லலித் அத்துலத்முதலி நேற்று கொழும்பில் வெளியிட்ட அறிக்கை
(3ம் பக்கம் பார்க்க)

## சென்னை விமானநிலையத்தில் இரு இலங்கை தமிழர் கைது

[சென்னை]
போலி பாஸ்போட்டுடன் வெளிநாடு பயணமாகவிருந்த இரு இலங்கைத் தமிழர் சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்தில் கடந்த இரு நாட்களில் கைது
(3ம் பக்கம் பார்க்க)

## அரசியல் நெருக்கடிகுறித்து முஸ்லிம்களின் முடிவு ஆராய்வு

(கொழும்பு)
நாட்டின் இன்றைய அரசியல் நெருக்கடியில் முஸ்லிம்களின் முடிவு குறித்து ஆராய இன்று கொழும்பில் ஐ. தே. கட்சி எம். பி.க்கள், நகரசபை பிரதேச சபை, மாகாணசபை மாநகரசபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் கூடுகின்றனர்.
இன்றைய கூட்டத்தில் தற்போதைய நெருக்கடியில் முஸ்லிம்களின் பங்களிப்பும் ஆதரவும் எந்தப்பக்கம் என்பது குறித்தும் முடிவெடுக்கப்படவுள்ளதாம். (சி)

## கச்சதீவு பகுதியில் இல. கடற்படையின் தொல்லை அதிகரித்து வருகிறது -ஜெயலலிதா

(சென்னை)
கச்சதீவுப்பகுதியில்இலங்கை கடற்படையினரின் தொல்லைகள் தற்போது அதிகரித்துவருவதாக தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா குற்றஞ்சாட்டியுள்ளார்.
இலங்கைகடற்படையினரின் தொல்லைகளினால் இராமேஸ்வரம் மீனவர்கள் தினமும்
(3-ம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் இன்று ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)
இன்று நல்லைக் கந்தப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராராய் காலை 7 மணிக்கு அழகிய சித்திரத்தேரில் அமர்ந்து வீதிவலம் வந்து அருள் பாலிப்பார்.
காலை 6 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று உட்பிரகாரம் சென்று சரியாக தேர் ஏறி ஏழு மணிக்கு தேரில் பவனி வருவார். நாளை தீர்த்தோற்சவம் நடைபெறும்.

## "நிவாரணத்தில் தங்கிநிற்காமல் தானாக வாழும் சமூகத்தை நாம் உருவாக்க வேண்டும்"

- மகேந்திரராசா கருத்து -

(யாழ்ப்பாணம்)
"நிவாரணங்கள் மூலம் வாழும் மக்களை உருவாக்காமல் தானாக வாழும் சமூகத்தை உருவாக்கவேண்டும்" இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) தெரிவித்தார்.
தமிழர் புனர்வாழ்வு கழகத்தினால் நடாத்தப்படும் "வன் செயல்களின் பாதிப்புக்களை மதிப்பீடு செய்தலும் அவற்றுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை இனங்காணலுக்கான ஆய்வுப்பட்டறையை ஆரம்பித்துவைத்து சிறப்புரை ஆற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது: "எங்கள் பிரதேசம் பயங்கரவாதப் பிடியிலிருந்து இன்னும் விடுபடவில்லை, அழிவும் நிச்சய மற்ற பொருளாதார - சமூக வாழ்வும் எங்கள் சமூகத்தை தொடர்ந்து வந்தபடியே உள்ளன. ஆகவே தற்கால சூழ்
[4ம் பக்கம் பார்க்க]

## கட்டுவனில் ஷெல் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]
பலாலி இராணுவ முகாமிலிருந்து பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி நேற்று எறிகுண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டதில், கட்டுவன் பகுதியிலுள்ள பல வீடுகள் சேதமடைந்ததுடன், ஒரு வீடு முற்றாக எரிந்து சாம்பராகிவிட்டதாகக் கூறப்படுகிறது (வி)

## தொடர்ச்சியான குண்டுவீச்சு குமுழமுனையில்'20 000ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)
குமுழமுனையில் 20, 000 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுவந்த நெற்செய்கை அந்தப்பகுதியில் விமானக் குண்டுவீச்சு, பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் காரணத்தால் பாதிப்புக்குள்ளாகியிருப்பதை அடுத்து நூற்றுக்கணக்கான விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
இந்தப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் தண்ணிமுறிப்புக்
(4ம் பக்கம் பார்க்க)

## பங்கீட்டு அடிப்படையில் அரிசி, மா விநியோகம்

[யாழ்ப்பாணம்]
பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் மகாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுக்கமைய யாழ். மாவட்டத்தில் உள்ள அ., உ. அட்டையை உடையவர்களுக்கு பின்வரும் பங்கீட்டு அடிப்படையில் அரிசி, மா பணத்திற்கு வழங்கப்பட உள்ளது

1 அங். அரிசி 1 கி., மா 2கி.
2 அங். அரிசி 2 கி., மா 3கி.
3 அங். அரிசி 3 கி., மா 4கி.
4 அங். அரிசி 4 கி., மா 5கி.
5 அங். மேல் அரிசி 5 கி.,

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

நாற்று இட மாங்கொட்டை மற்றும் லக்ஸ்பிறே, கைலண்ட் போன்ற பால்மா வெற்றுப் பைக்கற்றுகள் தேவை மில்க் வைற், யாழ்ப்பாணம்.

(ஏ 1557)

## ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும் தொடர்பு நேரில் சனி, ஞாயிறு காலை 11-00 - 12-00 மணி S ஜெயராசா 204. மானிப்பாய் றோட். ஒட்டு மடம், யாழ்ப்பாணம்.

(சி.4962)

## மணமகள் தேவை

30 வயதுள்ள G. C. E. படித்த ஆறு வருடங்களாக ஜேர்மனியில் பணிபுரியும் திக்குவாயுற்ற, சொத்துக்களுடைய அழகிய வாலிபனுக்கு மணமகள் தேவை. சாதி, மதம், சீதனம் கணிக்கப்படமாட்டாது. தொடர்பு விளம்பர இல சி 5276 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(சி 5276)

## விற்பனைக்கு

பாவித்த மரங்கள் சிறு, முகட்டுசிறு, கதவுகள், நிலைகள் 2 X 2 நெறப்றே, பலகைகள், மேசை, கதிரை, அலுமாரி, சோக்கேஸ், கடைக்குரிய தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். (சி 5279

## தேவை

புடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் தேவை (Sales Girl). தொடர்பு: ஏசியன் ரெக்ஸ்ரைல்ஸ், பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி (சி 5282)

## அக்குபஞ்சர், ஹோமியோபதி சிகிச்சை

கொழும்பு தெற்கு அரச வைத்தியசாலையில் கடமையாற்றும் விரிவுரையாளரினால் நாரிப்பிடிப்பு, மூட்டு வாதம், தொய்வு, கபாலகுத்து தோல் வியாதிகள். நரம்பு தொடர்பான தீராத நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டுவருகிறது மேலதிக விபரங்களுக்கு இல. 121/2, மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். இல 95, யாழ். வீதி, மானிப்பாய். திருமதி சத்தியமூர்த்தி. கருவேலடி லேன், கொக்குவில்.

(சி 5280)

## இடமாற்றம்

பிரகுகன் தொழிற்சாலை இடவசதியின்மை காரணமாக வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

(சி 5286)

## விற்பனைக்கு

நல்ல இன பால் மாடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பிரகுகன் தொழிற்சாலை. வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

(சி-5287)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## சைக்கிள் திருட்டு

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நேற்றுமுன்தினம் புதிய லுமாலா துவிச்சக்கரவண்டியொன்று திருடப்பட்டுள்ளது.

(71)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991-09-30ம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தாவரவியல்-
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/
சிரேஷ்டவிரிவுரையாளர் தரம் II/
உதவிவிரிவுரையாளர்.

2. தற்காலிக உதவி விரிவுரையாளர் (கணனி விஞ்ஞானம்)

சம்பள அளவுத்திட்டம்

1. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I- ரூபா 9,600/- 8 X 250-11,600/- மாதமொன்றுக்கு

2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்II- ரூபா 8,000- 5 X 250-9,250/- மாதமொன்றுக்கு

3. உதவி விரிவுரையாளர்- ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஒரு வருடத்திற்கு.

4 தற்காலிக உதவி விரிவுரையாளர்- ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளரின அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களிற்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு ரூபா 1-50 முத்திரையொட்டப்பட்ட 23X10 ச. மீ. அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.


அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-09-04. (எ-1563)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பிதழும்



08-08-91இல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி, புங்குடுதீவு 10ம் வட்டாரம்

**திருமதி பொன்னம்மா கந்தையா**

அவர்களின்

சபிண்டீகரணம் 7-9-91 சனிக்கிழமை காலை 10-00 மணியளவில்
25, றக்கா வீதி யாழ்ப்பாணம்
இல்லத்திலும் நடைபெறும் இக்கிரிகைகளிற் கலந்து அமரத்துவம் எய்திய எம்தாயாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்க வேண்டுகிறோம்.

திரு. இலட்சுமணன் (J. P.)
(மகன்)

25, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5281)

உ
சிவமயம்

## யாழ்ப்பாணம், திருவண்ணைநகர் அருள்மிகு பாலாம்பிகா சமேத விசுவலிங்க வைத்தீஸ்வரசுவாமி திருக்கோயில்

(வண்ணை சிவன் கோயில்)

## ஆலய பரிபாலன சபை

மேற்படி கோயிலுக்குரிய அனேகமான காணிகளுக்கு வாடகை / குத்தகை 1-9-1991 இலிருந்து அதிகரிக்கப்படுகின்றது. விபரம் காரியாலயத்தில் பெறலாம். 1992-ம் ஆண்டிலிருந்து உரிய காலத்திற்குள் செலுத்தப்படாத தொகை தண்டத்துடனேயே அறவிடப்படும்.

ஆலய பரிபாலன சபை.

தேவஸ்தானம்.
6-9-91

(எ-1558)

பொன்னாலை

## ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் ஆஞ்சநேயர் பொங்கல்

ஆவணி மாத வருடாந்த மகோற்சவம் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்று, அழகுமிகு திருத்தேரில் கண்ணன் வெளி வீதி உலாவந்த காட்சி பல்லாயிரக்கணக்கான அடியார்களால் ஆனந்த பரவசத்துடன் அனுபவிக்கப்பட்டு, தீர்த்தத் திருவிழா, சங்காபிஷேகம், திருக்கல்யாணச் சிறப்பு என்பவை மிகவும் மங்களகரமாக எல்லோருக்கும் ஆனந்தமும், திருப்தியும் அளிக்கக்கூடிய முறையில் நடைபெற்று இனிதே நிறைவுபெற்றுள்ளன.

காக்கும் கடவுளாம் கண்ணனின் திருவிளையாடல் அற்புதமானது; அனைவரையும் மெய்சிலிர்க்க வைப்பது.

எதிர்வரும் 15-9-1991 ஞாயிற்றுக்கிழமை வழமை போல் நடைபெற்றுவரும் ஆவணிக் கடைசி ஞாயிறு "ஆஞ்சநேயர் பொங்கல்" நிகழ்ச்சி மேற்படி தேவஸ்தானத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற நாராயணன் திருவருள் பாலித்துள்ளது.

பொங்கல் பிற்பகல் 3-00 மணிக்கு தொடங்கும். ஆஞ்சநேயருக்கு விசேட அபிஷேகம், பூசை நடைபெற்ற பின்னர், ஆஞ்சநேயர் வீதி உலா நிகழ்ச்சி நடைபெறும்.

அத்தருணம் அடியார்கள் அனைவரும் தங்கள் இஷ்டசித்திகளைப் பெற்றுய்ய, எல்லாம் வல்ல அப் பரம்பொருளைப் பணிவுடன் பிரார்த்திக்கின்றோம்;

(சி 5277) பரிபாலன சபை.

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



**செல்வன் தர்ஷன் யோகதுரை**

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த திரு. திருமதி யோகதுரை பவானி யோகதுரை தம்பதிகளின் செல்வப் புதல்வன் தர்ஷன் தனது முதலாவது பிறந்ததினத்தை 7-09-1991 (இன்று) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, மாமா, மாமி, அப்பம்மா, அம்மம்மா, அப்பப்பா, அய்யய்யா, பெரியப்பா, பெரியம்மா. சித்தப்பா, சித்திமார், அண்ணுமார், அன்னிமார் மற்றும் உறவினர்கள் சந்நிதி முருகன் அருளால் பலகலைகளும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

ஊரெழு கிழக்கு.

(சி 5281)

## துயரம் தணித்திடத்....

வண்டுகள் மருவு சோலை
மாந்தளிர் சுகந்தம் வீசக்
கெண்டைகள் மலர்கள் தாவிக்
குமரா நின்புகழைப் பாட
தண்டுகள் முளவு கொட்டத்
தமிழிசை ஒலிக்கத் தேரில்
எண்டிசை அருள் பாலிக்க
எழுந்த செவ்வேளே போற்றி!

புலர்ந்திடும் காலைப்போதினில் நீறு
பூசிய மேனிய ராகக்
கரங்களைக் கூப்பிச் சிந்தனைத் தாழ்த்திக்
கண்களில் நீரினைச் சுமந்து
வரந்தரக் கோரும் மெய்யடி யார்க்கெலாம்
வாழ்வளித் துய்திடத் தேரில்
வலந்தரும் இறையே வளங்கொளிர் நல்லை
வாளுறை முருகவேள் போற்றி

வெஞ்சமர் தன்னை வேல்படை கொண்டு
வீழ்த்தியே அசுரரை தேவர்க் (கு)
அஞ்சிடேல் என்று அபயங்கள் தந்த
அண்ணலே! தேருலா மீது
தஞ்சமென் றுன்னடி சார்ந்தவர் துயரம்
தணித்திடத் தேவியர் கூட
கொஞ்சிடும் குழந்தைச் சிரிப்பினில் அழகு
குவிந்திட விரைந்தவா போற்றி!

— நெடுந்தீவு லக்ஸ்மன்

# கடந்த இரண்டரை மாதத்தின் பின் கொம்படிப் பாதை ஊடாக

# போக்குவரத்து ஆரம்பம்

(மருதங்கேணி)

ஆனையிறவு இராணுவமுகாமுக்கும், வெற்றிலைக்கேணி இராணுவ முகாமுக்கும் தரைப்பகுதி ஊடாக எவ்வித தொடர்பும் கிடையாது.

இரண்டு முகாமும்களும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலேயே தொடர்ந்தும் காணப்படுகின்றன

வெற்றிலைக்கேணியிலிருந்து இராணுவம் ஆனையிறவுக்குச் சென்ற பாதையில் காணப்படும் புல்லாவெளிப் பகுதிக்கூடாக மக்கள் கட்டைக்காடு போக்கறுப்பு ஆகிய இடங்களுக்கு வீடுகளை பார்க்கச் சென்றுவருகிறார்கள்

தற்போது கொம்படிப் பாதைக்கு ஊடாக மீண்டும் சயிக்கிள் பயணிகளின் போக்குவரத்தும் ஆரம்பமாகியுள்ளது. கடந்த இரண்டரை மாதங்களாக இப்பாதையால் போக்குவரத்துக்கள் எதுவும் நடைபெறவில்லை. சயிக்கிள் வியாபாரிகள் வவுனியாவிலிருந்து பொருட்களை இப்பகுதிக்கு ஊடாக எடுத்துவருகிறார்கள். (127)

பன்முகப்படுத்தப்பட்ட நிதியில்—

# யாழ். மாவட்டத்திற்கு $21\frac{1}{2}$ லட்சம் ரூபா ஒதுக்கீடு

(சித்தன்கேணி)

1991ம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் யாழ். மாவட்டத்திற்கு $21\frac{1}{2}$ லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடற்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாவும் கல்வித் திணைக்களத்திற்கு புதிய கட்டிடங்களை அமைப்பதற்கு 12 லட்சம் ரூபாவும் வீதிகளைத்திருத்துவதற்கு $2\frac{1}{2}$ லட்சம் ரூபாவும் நன்னீர் வளத்தினை ஆராய்வதற்கு 50 ஆயிரம் ரூபாவும் சண்டிலிப்பாய் பதவிக்குளம் வாய்க்கால் திருத்த வேலைக்கு 50 ஆயிரம் ரூபாவும். சாவகச்சேரி தனங்கிளப்புக்குளத்தை மறுசீரமைப்பதற்கு இரண்டு லட்சம் ரூபாவும், உடுவில் பெரிய தம்பிரான் குளம் திருத்தவேலைக்கு இரண்டு லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கற்கோவளம் கடலுணவு மாற்றுஉற்பத்திக்கு11/2லட்சம் ரூபா, தற்காலிக கட்டிடங்கள் அமைப்பதற்கு. யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் ரூ. 1, 60, 700/- யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம் 1, 00, 000/- யா/ரோ. க. த. க. பாடசாலை 30, 900/- யா/சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயம் ரூ.1.79,000/-. யா/உரும்பராய் இந்துக்கல்லூரி ரூ. 88,400/-, யா/வல்லை சிவகுரு வித்தியாலயம் ரூ 2,10,000/-, யா/நாகர் கோவில் மகாவித்தியாலயம் ரூ. 1,81,000/-, யா/சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயம் ரூ 2,50,000/-. யாழ்- பருத்தித்துறை வீதி 13ஆம் 14ம் மைல குழிகளை செப்பனிடல் ஒன்றரை லட்சம் ரூபா. யாழ்- பருத்தித்துறை வீதியைத் திருத்த 1 லட்சம் ரூபா. (137)

## செய்திச்சுருக்கம்

### கண்காட்சி

(மானிப்பாய்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் வாழைநாரினால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் கண்காட்சி கண்டி வீதி 79-ம் இலக்க கிளையில் இன்நாளையும் நடாத்தவுள்ளனர். (71)

### நிரஞ்சன மண்டபம்

(யாழ்ப்பாணம்)

நாகர்கோயில் மகாவித்தியாலயத்திற்கென தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் (ரி. ஆர். ஓ) புதிதாக அமைத்துக் கொடுக்கப்பட்ட ஐந்து வகுப்பறைகளை நடாத்தக்கூடிய பண்டபம் திறந்துவைக்கப்பட்டது.

இப்பாடசாலையின் பழைய மாணவியும், மாவீரருமான செல்வி நிரஞ்சனா ஞாபகார்த்தமாக இந்த மண்டபத்திற்கு 'நிரஞ்சன மண்டபம்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

### முதலுதவி பயிற்சி வகுப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செ. ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் மல்லாவியிலும் உதயநகரிலும் முதலுதவி பயிற்சி வகுப்புக்களை நடத்தினார்கள்.

### குளங்கள்புனரமைப்பு

(புலோலி)

வடமராட்சிப் பகுதியிலுள்ள வெள்ளவாய்க்கால்கள் குளங்கள் அனைத்தும் அவ்வப்பகுதி உற்பத்திக்குழுக்கள் தமிழ்ஈழ ஆய்வு நிறுவனத்தின் ஆதரவுடன் சிரமதானம் மூலம் புனரமைத்து வருகின்றன. [61]

### பராமரிப்பு பணி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் காயமடைந்து அனுமதிக்கப்பட்டுள்ள போராளிகளை பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை முதலாம் வருடப்பயிற்சி ஆசிரியர்கள் பராமரிப்பதில் ஈடுபட்டுள்ளனர். [52]

### நூல் நிலையம்

(கொழும்புத்துறை)

இருபாலை தமிழ் மாமன்றத்தில் தமிழீழத்திலிருந்து வெளிவரும் நூல்களை, சஞ்சிகைகளை சேகரிக்கப்படுத்தி பாதுகாக்கும் முகமாக நூல்நிலையம் ஒன்று அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது

### சேவைநலம் பாராட்டு

(உடுவில்)

சுன்னாகம் தபாற்கந்தோரில் சேவையாற்றிய 12 ஊழியர்களையும், அஞ்சல் அதிபராக கடமையாற்றிய திரு. இ. திருநாவுக்கரசுவையும் கௌரவித்து அப்பகுதி மக்களால் சேவை நலம் பாராட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 3-00 மணிக்கு மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

## இராசி பலன்

07 · 09 · 1991

சனிக்கிழமை

தமிழுக்கு ஆவணி 22

சதுர்த்தசிமாலை 6.57வரை; மகம் பி. இ. 3 35வரை அமிர்த சித்தம் இராகுகாலம் காலை 9.04 முதல் 10–34 வரை சுப நேரம் மாலை3–04 முதல்4–34 வரை நல்லூர் கந்தசுவாமி தேர் அதிஸ்டஎண்கள் 5–9.

மேடம்: மனக்குறை, தொழில் முடக்கம், உடல் சோர்வு.

இடபம்:- வேண்டாத தொல்லை, குளம்பியநிலை, அலைச்சல்.

மிதுனம்:- தொழில் சிறப்பு, வெகுமதி, நண்பர் உதவி.

கடகம்:- இனம்புரியாத கவலை, மனச்சோர்வு, பயணம்

சிங்கம்:- புதிய மாற்றம், உடன் பிறவாதவர் உதவி, வெற்றி.

கன்னி: வெளியூர்தொடர்பு, கருத்துவேறுபாடு, பணமுடை

துலாம்:- உறவினர் பாராட்டு, குடும்ப மகிழ்ச்சி, காரியசித்தி.

விருச்சிகம்:- அதிகஉழைப்பு நல்லோர் சினேகம், புகழ்.

தனுசு:- குடும்பத்தில் குளப்பம், அவமதிப்பு, விடாமுயற்சி

மகரம்:- கடமை உணர்வு, பொதுப்பணி, குடும்ப உல்லாசம்.

கும்பம்;- கடமை உணர்வு, பொதுப்பணிகுடும்பஉல்லாசம்

மீனம்: புரியாதபுதிர், நண்பர் உதவி, காரியவெற்றி.

பொதுப்பலன்சாதாரணநாள்.

- ஜோஸ்யர்

### கொழும்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை இவர்கள் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இது அரசியல் சாசனம் சம்பந்தப்பட்ட முக்கியமான விடயம். இதைத் தீர்மானிக்கத் தங்களுக்கு அதிகாரம் இல்லையெனக் கூறி திரு. லலித் அத்துலத்முதலி தலைமையில் 8 எம். பிக்கள் சமர்ப்பித்த மேற்படி விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்துள்ளது.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டு மனுவில் கையொப்பமிட்ட ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் ஐ. தே. கட்சியில் அங்கம் வகிககமுடியாது: அவர்கள் கட்சியிலிருந்து வெளியேற்றப்படவேண்டுமென்று தீர்மானிக்கும் முகமாக ஐ. தே. கட்சியின் செயற்குழுவும, நிர்வாகக் குழுவும் நேற்றும், இன்றும் கூட்டம் நடத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவேதான் ஐ. தே. கட்சியின் போட்டிக் குழுவினர் சிலர் கூட்டத்தை முந்திக்கொண்டு 8 பேரும் கொழும்பு மாவட்ட நீதிமன்றததில் வழக்கு ஒன்றைதாக்கல்செய்து ஐக்கிய தேசியக் கட்சி தங்களை வெளியேற்றக்கூடாது வெளியேற்றமுடியாது எனக் கோரும்தடைஉத்தரவுஒன்றை நீதிபதியிடம் கேட்டிருந்தார்கள்.

இதேவேளை அத்துலத்முதலியும் அவரது சகாக்களும் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் அடுத்தவாரம் தமது விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டியிருக்கும்.

இதற்கிடையே ஐ. தே. கட்சியின் கூட்டம் இன்று நடைபெறும்போது சம்பந்தப்பட்ட 8 எம். பிக்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படக்கூடும் அல்லது அவர்கள் கட்சியைவிட்டு வெளியேற்றப்படலாம், இதனல் அவர்கள் தமது நாடாளுமன்ற பதவியை இழக்கவேண்டி நேரிடலாம் என்றும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

### சென்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் சட்டவிரோதமான முறையில் லண்டனுக்குப் பயணமாகும்போது கைது செய்யப்பட்டதாகவும் மற்றைய நபர் சிங்கப்பூர் சென்று சிங்கப்பூர் விமான நிலைய அதிகாரிகளால் திருப்பியனுப்பப்பட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட இருவரும் தற்போது பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். [க]

### புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள பன்மதவாச்சி வேப்பங்குளம் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் காட்டுப்பகுதிகளில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட போது விடுதலைப் புலிகளின் கண்ணி வெடிகளில் சிக்கிக்கொண்டதால் தமது கால்களை இழந்ததினால், இராணுவத்தினர் தமக்கு ஏற்பட்டசேதங்களுடன் மீண்டும் முகாமுக்குள் சென்றுவிட்டதாகக் கூறப்படுகின்றது. (வி)

### கச்சதீவுப் பகுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்படுகின்றனர். கடந்த வாரம் மேற்படி பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள்மீது கடற்படையினர் தாக்குதல்களை மேற்கொண்டு பலரை சுட்டுக் காயப்படுத்தியதுடன் அவர்களின் வலைகளையும் பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் மீன்பிடிக்கச் சென்ற ஆறு மீனவர்கள் இதுவரை கரைதிரும்பவில்லை. இவர்கள் அநேகமாக இலங்கை கடற்படையினரால் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம்.

இப்பகுதிகளில் இலங்கை கடற்படையினர் இதுவரை காணமும் 144 மீனவர்களையும் 99 வள்ளங்களையும் கடத்திச் சென்றுள்ளார்கள் என்றும் முதலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (வி)

### உணவுப் பொருள்கள்

(பருத்தித்துறை)

தமிழ்பேசும் போக்குவரத்து ஊழியர் சங்க பருத்தித்துறை பஸ் டிப்போ ஊழியர்கள் விடுதலைப் போரிலே காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் போராளிகளுக்குச் சுமார் 5, 000 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களை வழங்கியுள்ளனர்.

### பயிற்சி வகுப்பு

(உடுவில்)

மருதனாமடம் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நான்காம் ஐந்தாம் ஆண்டுகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு செப்ரெம்பர் 16, 17, 18ம் திகதிகளில் மருதனாமடம் இராமநாதன் கலலூரியில் நடைபெறும்.

### சட்டசபையிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேற்க வேண்டுமென காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. சிங்காரம் சபையில் பேசியதை தொடர்ந்தே தி. மு. க உறுப்பினர்கள் வெளிநடப்புச்செய்தார்கள். [வி]

### சம்பளம் இல்லை

[யாழ்ப்பாணம்]

ஓட்டுசுட்டான், மட்பாண்டத் தொழிற்சாலையில் கடமையாற்றிவரும் 112 ஊழியர்களுக்கு கடந்த வருடம் ஜூன் மாதத்திலிருந்து இம்மாதம் வரையில் எதுவித சம்பளமும் வழங்கப்படவில்லை. [62]

### பொதுமக்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யொன்றில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு ஏராளமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் சுதந்திரமாக தமது கருத்துக்களை வெளியிட அஞ்சுகின்றார்கள்.

அதிகாரபலம் குவிந்துகிடக்கும் ஜனாதிபதிக்கும், பலம் இன்றியுள்ள ஒரு நாடாளுமன்றத்துக்குமிடையேயுள்ள ஏற்றத்தாழ்வுதான், இன்றைய இலங்கையின் ஜனநாயகத்துக்கு உள்ள மிகப்பெரிய குறைபாடு என்று திரு லலித் மேலும் தெரிவித்துள்ளார். (வி)

# வடக்கு கிழக்கு பகுதிகளுக்கென அபிவிருத்திநிதியம் ஒன்று வேண்டும்

- பேராசிரியர் துரைராஜா

[யாழ்ப்பாணம்]

''வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கென அபிவிருத்தி நிதியம் ஒன்றை உருவாக்கவேண்டும். இதற்கு வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் நிதி உதவிகளை வழங்கமுன்வரவேண்டும்'' இவ்வாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா 'வன்செயல்களின் பாதிப்புகளை மதிப்பீடு செய்தலும் அவற்றிற்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை இனங்காணுதலுக்குமான' ஆய்வுப் பட்டறையில் நேற்றுசிறப்புரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது;

தமிழீழத்தில் வாழும் மக்களின் சேமிப்புக்கள் பெருமளவில் வங்கிகளில் இருக்கிறது இது தமிழீழ மக்களுக்கு பயன்படாமல் தென்னிலங்கையில் உள்ள மக்களுக்கு பயன்படுகிறது. இந்நிலை மாறவேண்டும்.

இராமிய வங்கிகள், கடன் உதவிச் சங்கங்கள் மூலம் எமது சேமிப்பை திரட்டி எமது மண்ணில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவ மக்கள் முன்வர வேண்டும்.

எமது மண்ணிலுள்ள அகதிகள் பிறரில்தங்கியிருக்காது சுயமாக தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வாழ வழி வகுக்க வேண்டும் என்றார். [153]

## தமிழீழ மீட்பு நிதி

யாழ்ப்பாணம்)

14-09-91 சனிக்கிழமை தினத்திலும் 15-09-91 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் தமிழீழ மீட்புநிதி திரட்ட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பகுதிகளைச் சேர்ந்த தமிழீழ மீட்புநிதி செலுத்த விரும்புவோர் இவ் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# கடந்த 30 ஆண்டுகளில் 80 வீதமான தமிழீழ மக்கள் அகதிகள் நிலைக்குத் தள்ளப்பட்டனர்!

- சி. வி. கே. சிவஞானம்

(யாழ்ப்பாணம்)

''தமிழீழத்தின் சகலமாவட்டங்களிலும் சுமார் 2 லட்சம் மக்கள் அகதி முகாம்களிலும் சுமார் 4 லட்சம் பேர்வரை முகாம்களுக்கு வெளியேயும். சுமார் $2\frac{1}{2}$ லட்சம் பேர்வரை வெளிநாடுகளிலும் அகதிகளாக இடம்பெயர்ந்து வாழ்கின்றனர்'' என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த திரு. சி வி கே. சிவஞானம் தெரிவித்தார்.

ஆய்வுப்பட்டறைக்கு தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: கடந்த 30 ஆண்டுகளில் பொதுவாகவும், 1983ம் ஆண்டிற்கு பின்பு குறிப்பாகவும் தமிழீழ மக்களில் எண்பது சதவீதமானவர்கள் ஸ்ரீலங்கா அரசின் ஆயுதப்படைகளின் வன்முறைகளால் அகதிகளாகியும் இடம்பெயர்ந்தவர்களாகியும் உள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்தும் ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரக் கட்டுப்பாடுகளினாலும், மின்சாரவிநியோகத்துண்டிப்பு போன்றவற்றாலும் தொழில் வாய்ப்பை இழந்தும் உள்ளவர்களது ஆகக்குறைந்த தேவைகளைப் பூர்த்திசெய்வது பாரிய தேவையும் பிரச்சினையுமாகும்.

எமது பிரதேசத்தின் மீது ஆட்சி உரிமை செலுத்துவதாக கோருவதன் மூலம் தமிழ்மக்களுக்கு இழைக்கப்படும் அவலங்களுக்கும் பாதிப்புகளுக்கும் எதிராக நிவாரணம் வழங்கலும், புனர்வாழ்வு அளிப்பதும் ஸ்ரீலங்கா அரசின் அடிப்படைக் கடமையாகிறது. எனினும் அந்த அரசு அதன் கடமையை வெளிப்படையாகவே தட்டிக்கழித்துச் சிறிய வகையிலான பெயரளவு நிவாரண புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் அரசசார்பற்ற நிறுவனங்களின் சேவைகள் மிகவும் இன்றியமையாததாகியுள்ளது. [153]

## நிவாரணத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில்-அதாவது பாதிக்கப்பட்ட நிலையிலேயே எங்கள் தேசத்தில் சுயமாக வாழக்கூடியதொரு நிலையை பாதிக்கப்பட்ட மக்களிடையே ஏற்படுத்தவேண்டும். தற்போது தோற்றம்பெற்றிருக்கும் புதிய சமூக வடிவமைப்புகளுக்கு ஏற்றமாதிரிபயனுள்ள-அர்த்தமுள்ளசெயற்திட்டங்களை நாம் வகுக்கவேண்டும்.

இதே நேரத்தில், பேரினவாத அரசின் இன ஒழிப்பின் விளைவுகளால் தோற்றம்பெற்ற விதவைப் பெண்கள், அநாதைப் பிள்ளைகள் போன்றோர் தமது வாழ்வை அமைத்துக் கொள்வதற்கு உதவுவதையும், குழந்தைகள் கர்ப்பிணிப்பெண்கள் ஆகியோரின் உடல், உளவளர்ச்சிக்கான செயற்திட்டங்களுக்கு உதவுவதையும், நாம் உடனடிக் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழீழ தேசமெங்கும் அரச வன்முறையால் பாதிக்கப்பட்டமக்கள்பரந்துபோய்நிற்கிறார்கள். இந்த நிலையில்எங்கு? யார்? என்ன உதவிகளைச்செய்கிறார்கள் என்ன வேலைத்திட்டங்களைச் செய்கிறார்கள் என்பது எவருக்கும் சரியாகத் தெரியாது. இதனால் ஒருவருக்கு திரும்பத், திரும்ப பல பக்கங்களாலும் உதவிகள் வந்துசேருகின்றன. இதே நேரம் வேறு சிலருக்கு எந்த விதமான உதவியுமே கிடைக்காமல் போய்விட்டிருக்கும். இக்குறைபாடுகள் தீர்க்கப்படவேண்டியவை ஆகும்.

சிறிலங்கா அரசு ஓர் பொருளாதார நெருக்கடியை தோற்றுவித்து, அதன்மூலம் ஓர் பொருளாதாரப் பஞ்சத்தை, எமதுதேசத்தில் உருக்கொள்ள வைத்து அதனையே விசையாகப் பயன்படுத்தி எமது மக்களை அழிக்கமுயல்கிறது.

சிங்கள அரசு, எமது தேசத்தில் பட்டினிச் சாவுகளை எதிர்பார்த்து வாய்பிளந்து நிற்கிறது இந்த நேரத்தில். வேதனையில் தவிக்கும்தமிழ்தேசத்து மக்களுக்கு அரச சார்பற்ற பொது நிறுவனங்களின் செயற்பாடுகள் ஆறுதல் அளிக்கும் ஒன்றாக விளங்கட்டும்.

(152-153)

## மரண அறிவித்தல்

### Dr. வேலுப்பிள்ளை சின்னத்துரை

(Retired R. M. P.)

மானிப்பாயை சேர்ந்த Dr. வேலுப்பிள்ளை சின்னத்துரை காலமானார். இவர் பரமேஸ்வரி (திலகத்தின்) அன்புக் கணவரும், கிரிதரன் (சவுதி அரேபியா), Dr துளசி விக்கினேஸ்வரன் (யாழ். போதனா வைத்திய சாலை), சியாமளா, ராதிகா (கொழும்பு), நிரஜா (பிரான்ஸ்), வித்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், க. விக்கினேஸ்வரன் (மின் அத்தியட்சகர், இ. மி. ச.), ராசேஸ்வரி, ஜெயபாலன், அருள்முருகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மகேஸ்வரி, காலஞ்சென்ற செந்தாமலர், காலஞ்சென்ற செல்லத்துரை, பூமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 7-9-91 இன்று பகல் 12-00 மணியளவில் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: க.விக்கினேஸ்வரன்

நாவலடி ஒழுங்கை,
மானிப்பாய் தெற்கு, மானிப்பாய். [சி-5290]

### திரு. சங்கரப்பிள்ளை ஆறுமுகம்பிள்ளை

காரைநகர் மருதடியைப் பிறப்பிடமாகவும் பாலாவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பிரபலவர்த்தகர் C S. ஆறுமுகம்பிள்ளை 6ம் திகதி வெள்ளிக்கிழமை காலையில் சிவபதமடைந்துள்ளார். அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் சங்கரப்பிள்ளை திருமதி சங்கரப்பிள்ளையின் அன்பு மகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், சிவசுப்பிரமணியம் (ஜெர்மன்), யோகேஸ்வரி, வசந்தாதேவி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், தவமலர் (ஜெர்மன்), மகேந்திரராசா (R. M. P. கொழும்பு), ஞானப்பிரகாசம் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், வரதராசன், சிவாஜினி, நஜினி, சங்கீதா, துசிதா, நிர்மலா, தருமையா, கவிதா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிதம்பரம், இலட்சுமி, கணபதிப்பிள்ளை, வர்த்தகர் இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகளும், தகனக்கிரியைகளும் 06-09-1991 அன்று மாலை 3 மணியளவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றாருக்கும், உறவினருக்கும், நண்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்; ச. இரத்தினம்.

No: 10,
இந்துமகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம். [சி-5289]

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Sri Lanka under Licence Number B/10336/81.

# கோயம்புத்தூரில் இந்து முஸ்லிம் கலவரம்!

(சென்னை)

கோயம்புத்தூரில் இந்து-முஸ்லிம் கலவரங்கள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சம்பவம் ஒன்றில் இந்து முன்னணியைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாகவும் இதன் பிரதிபலிப்பாக முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் கத்தியால் குத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மற்றொரு சம்பவத்தில் முஸ்லிம் இனத்தவர் ஒருவரை 3 பேர் கத்தியால் குத்தியதாகவும் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகவும் மேலும் இரு கத்திக்குத்துச் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க]

## தமிழகத்தில் க. பொ. இரத்தினம்

(சென்னை)

முன்னாள் காவலூர் எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் தமிழகத்தில் சுகமாயிருப்பதாகவும் அவர் இறந்துவிட்டதாக வெளிவந்த செய்திகள் தவறென்றும் அவரது பெருமகன் அறிவித்துள்ளார். [சி]

## மருந்துகள் வந்தன

[யாழ்ப்பாணம்]

நேற்று முன்தினம் வந்த குமண கப்பலில் தனியார் துறையினருக்குபோதியமருந்து வகைகள் வந்துள்ளன. அத்துடன் தபால்களும் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [எஸ்]

## வரலாறு பாடநூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஆண்டு 6-க்கான வரலாறு பாடநூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 9-ஆம் திகதி திங்கட்கிழமை மு. ப. 9 மணிக்கு யா. இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். இவ்விழாவில் சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும், உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும், பாடசாலை அதிபர்களையும். சமூகக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களையும் தவறாது பங்குபற்றும்படி யாழ் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பங்கீட்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மா 6 கி.

அரிசி கிலோ ரூபா 13-80 ஆகவும், மா கிலோரூபா 12-25 சதமாகவும்வழங்கப்படும். இவ் விநியோகம் 7ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 20ம் திகதி முடிவு பெறும் எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூதூரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்களாக இராணுவத்தினர் தமிழ்மக்களை துன்புறுத்திவருவதுடன் அவர்களின் வீடுகளைத் தீயிட்டு எரித்தும் வருகின்றனராம்.

இராணுவத்தினர் மூதூர் பகுதியில் உள்ள சீனன்வெளி, பெருவெளி பகுதிகளைச் சுற்றி வளைத்து தமிழ் மக்களை வீடுகளில் இருந்து அடித்துக்கலைத்ததுடன் கைலாசபிள்ளை ராஜன் (வயது 38) என்பவரை சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

இராணுவத்தினரின் அட்டூழியங்களுக்கு பயந்து பெருமளவு தமிழ் மக்கள் காடுகளில் தஞ்சம் புகுந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. [வி]

## முல்லைத்தீவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டதாகவும் 42 இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் கேர்ணல் சரத் முனசிங்க நேற்று கொழும்பில் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் முல்லைத்தீவுப் பகுதியில் அரசபடையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் தொடர்ச்சியாக உக்கிர மோதல்கள் இடம்பெற்றுவருவதாகவும் குண்டு வீச்சு விமானங்கள், ஹெலிகாப்டர்கள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டுவருவதாகவும் விமானப்படைஉயரதிகாரி ஒருவர் நேற்று கொழும்பில் தகவல் வெளியிட்டுள்ளார். [க]

## வீர வணக்கம்

(யாழ்ப்பாணம்)

மணலாறு மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த வேங்கைகளான டாரினி (மரியகொறற்றி யோசப் சக்கோட்டை அல்வாய்), பாபு (தங்கவடிவேல் சசிக்குமார் பெருவழித் தோப்பு மூதூர்), பாபு (கந்தசாமி ஆனந்தம் விசன்கேணி கிரான் மட்டக்களப்பு), பாரூக் (தனபாலன் சிறீதரன் சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலி), ஜானி (குலசேகரம்பிள்ளை கலைவாணன் 4ம் வட்டாரம் சீனன்குடா திருமலை), ரஞ்சித்குமார் (பாலகுமார் 3ம் வட்டாரம் புங்குடுதீவு), இராவணன் (கதிரவேலு கிருபாகரன் நெல்லியடி கரவெட்டி), அருள்நங்கை (பிரேமலதா மார்க்கண்டு சேரர் ஊறணி வல்வெட்டித்துறை).

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## பணிப்பாளர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்களினால் கொழும்பு சென்று சிகிச்சை பெறுவதற்கு சிபார்சு செய்யப்பட்ட கடும்நோயாளர்களையும் அவர்களை அழைத்துச் செல்லும் உறவினர்களையும் சகல ஆவணங்களுடன் எதிர்வரும் செவ்வாய், புதன்கிழமை ஆகிய இருநாட்களில் பணிப்பாளர் காரியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை வந்து பதிவு செய்துகொள்ளுமாறு பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம் அறிவித்துள்ளார். (56)

## தொடர்ச்சியான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குளத்தையே நம்பி வேளாண்மையை செய்துவந்தனர் அரசபடையினரின் வான், பீரங்கித் தாக்குதலினால் குமுழமுனைப் பிரதேசம் தற்போது மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது

அத்துடன் வீடுகள், கட்டிடங்கள் மீன்பிடிபடகுகள்கடும் சேதத்திற்குள்ளாகியிருக்கின்றன.

மணலாறு மாவட்ட எல்லைப் பகுதியில் படையினர் ஷெல் தாக்குதல்களை குமுழமுனைப் பகுதியை நோக்கி இரவு பகலாக மேற்கொண்டவண்ணமுள்ளனர். [56]